DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.124/2016**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | சாத்தையா | Age | : | 68 |
| F/N | : | தேவராஜன் | Occupation | : | சார்பு ஆய்வாளர் (ஓய்வு) |
| Village | : | பெரியார் நகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 17-th day of August 2022.

**17.08.2022**

**முதல் விசாரணை:**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று இராமநாதபுரம் மாவட்டம் பெரியார் நகரில் வசித்து வருகிறேன். கடந்த 09.12.2009 ம் தேதி இராமநாதபுரம் மாவட்டம் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேல்வரைவு செய்த D1/1737, Dated : 25.06.2009 மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்திற்கு வரப்பெற்ற தபாலை பெற்று மேற்படி தபாலில் மதுரை மண்டல பாஸ்போட் அதிகாரி அவர்கள் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 40/2009 பிரிவு 468, 471, 420 இதச–ன் கீழ் வழக்கு பதிவு செய்து அதன் அசல் மற்றும் புகாரை இணைத்து இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை புலன் விசாரணை அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு கு.வி :**

நான் கடிதத்தின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். பாஸ்போட் அதிகாரி யாரையும் விசாரணை செய்து நான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவில்லை. பள்ளி மாற்றுச்சான்றிதழை பாஸ்போட் அலுவலகத்தில் யார் சமர்ப்பித்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. முறையாக விசாரிக்காமல் நான் இந்த முதல் தகவல் அறிக்கையை மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதிற்கிணங்க பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை

என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரி பாஸ்போட் அலுவலகத்தில் மாற்றுச்சான்றிதழ் சமர்ப்பிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**